★ நவீன ஆயுதங்களுடன் ஆயிரக்கணக்கான ராணுவம் வந்துள்ளது

# மண்டைதீவில் 3 கடற்படைக் கப்பல்கள்!

மண்டைதீவு கடற்பகுதியை நேற்று அதிகாலை மூன்று பெரிய கடற்படைக் கப்பல்கள் வந்தடைந்துள்ளன. இக்கப்பல்கள் இப்பொழுது அப்பகுதிகளில் நங்கூரமிட்டுள்ளன. இவற்றுக்குப் பாதுகாப்பாக பல பீரங்கிப் படகுகள் அப்பகுதியில் காணப்பட்டன இக்கப்பல்களில் பெருந்தொகையான இராணுவத்தினருடன், இராணுவ தளபாடங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. நேற்றுக்காலை முதல் கப்பல்களில் இருந்து இராணுவத்தினரை மண்டைதீவு மினி இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்வதில் பல மோட்டார் படகுகள் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தன. இப்படகுகள் நயினுதீவுப் பகுதியை சேர்ந்தவர்களுடையவை எனவும் அவை கடற்படையினரால் மண்டைதீவு கடற்பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மண்டைதீவுக்கு கொண்டுவரப்பட்ட இராணுவத்தினர் அங்கிருந்து ட்ரக் வண்டிகள் மூலம் கோட்டை முகாமுக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர்.

விலை ரூபா 1-25 REGISTERED AS A NEWSPAPER

NALLUR ... MUNICIPAL COUNCIL

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

முரசு 1 ஒலி 167 வெள்ளி 15-05-1987 (வைகாசி 01) றம்ழான் 16

● சடலங்கள் மீட்கமுடியாது சின்னுபின்னமாக சிதறிக்கிடந்தன

# திருமலையில் 17 இராணுவம்

# இரு கண்ணிவெடிக்குப் பலி!

## ஊர்காவற்படை மோதலில் மூன்று சிங்களவர் படுகொலை

(திருமலை)

திருமலையின் இரண்டு வெவ்வேறு இடங்களில் தீவிரவாதிகளால் நேற்று மேற்கொள்ளப்பட்ட இரு கண்ணிவெடித் தாக்குதல்களில் பதினேழுக்கும் அதிகமான ராணுவத்தினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும், இவர்கள் பயணம் செய்த கவச வண்டிகள் சிதறிப்பறந்ததாகவும் ஏ. எப். பி. செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இரண்டு டசினுக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் இத்தாக்குதல்களால் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர்.

மரணமான ராணுவத்தினரின் சடலங்களை நடந்து சென்றோ, வாகனத்தில் சென்றோ மீட்கமுடியாத நிலையேற்பட்டதால், ஹெலிகப்டர் மூலமே அவை மீட்கப்பட்டன. அநேகமான சடலங்களும் சிதைந்து கிடக்கக் காணப்பட்டன.

படுகாயத்துக்குள்ளானவர்களும் ஹெலிகப்டர்கள் மூலமே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அதேவேளையில் ஹெலிகள் பொதுமக்கள் வசிக்கும பகுதிகள் மீது நடத்திய தாக்குதலால் பலர் மரணமாக நேர்ந்தது.

### இருவர் காயமடைந்தனர்

மூதூர்ப்பகுதியில் ஊர்கா வற்படையினரும், தீவிரவாதிகளும் நேரடியாக மோதிக்கொண்ட சம்பவமொன்றும் நேற்று அதிகாலை இடம்பெற்றது. இதில் மூன்று சிங்களக் குடியானவர்கள் துப்பாக்கிச் சூடுபட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண கார் பவனி மீது வல்லையில் ஹெலி சுட்டது!

வல்லைவெளியில் நேற்றுமாலை ஹெலிகப்டர் ஒன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், திருமண வைபவமொன்றில் கலந்துகொண்டு வீட்டுத் திரும்பிய இருவர் காயமுற்றனர்.

துப்பளையில் திருமணம் முடிந்த பின்னர் யாழ். நாச்சி

— 6 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு வந்த ராணுவம் குடாவுக்குள் நுழையமுயற்சி

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தற்பொழுது ஆனையிறவு இராணுவ முகாமில் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த சில நாட்களாக வவுனியாவிலிருந்து அணி அணியாக ஆனையிறவு முகாமை வந்தடைந்துள்ளனர்.

இவர்களுடன் பல கவச வாகனங்கள், இராணுவ ட்ரக்குகள், இராணுவத்தினருக்குத்

—6 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில்நேற்று ஹெலி தாழப்பறந்து சுட்டது

(வேலணை)

ஊர்காவற்றுறை நகர்ப்பகுதியை நோக்கி நேற்றுக்காலை பதினொரு மணியளவில் வந்த ஹெலிகப்டரொன்று தாழப்பறந்து வந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டது. இரண்டு மினிபஸ்களைநோக்கி ஹெலிகப்டர் தாக்குதல் நடாத்தியபோது பஸ் சாரதி திறமையாக அதனைச் செலுத்தியதால் அதில் பயணம் செய்தவர்கள் எவ்வித காயங்களுமின்றித் தப்பினர். எனினும் இப்பகுதியிலுள்ள பல வீடுகள்

—6 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி வீசிய பிரசுரம்

"குடாநாட்டிலுள்ள பயங்கரவாதிகளையும், பயங்கரவாத மறைவிடங்களையும் கைப்பற்றுவதற்காக மிகவும் தயக்கத்துடன் பாதுகாப்புப் படை

—6 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி பள்ளமேட்டில் அழுகிய ஐந்து சடலங்கள்

(சிறப்பு நிருபர்)

பூநகரிப் பகுதியிலுள்ள பள்ளமேடு இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள பற்றைக்காட்டில் அழுகிய நிலையில் காணப்பட்ட ஐந்து சடலங்கள் அடையாளம் காண முடியாத நிலையில் அப்பகுதிப் பொதுமக்களால் அடக்கம் செய்யப்பட்டன.

கடந்த மாதம் பஸ் ஒன்றிலிருந்து இறக்கப்பட்டு காட்டிற்குள் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டவர்களது சடலங்களாக இவை இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

—6 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி டாக்டர்கள் குழு மீண்டும்கொழும்புசென்றது

யாழ். போதனை வைத்தியசாலையை உள்ளடக்கிய நகரின் முக்கிய பகுதியை சமாதான வலயமாக்கும் பேச்சுக்களை நடாத்துவதற்கு விதிக்கப்பட்ட முக்கிய நிபந்தனையை அரசு நிராகரித்ததினுல் வைத்தியசாலை விவகாரம் மேலும் சிக்கலடைந்திருப்பதாக தெரியவருகின்றது.

இப் பேச்சுக்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளினுல் விதிக்கப்பட்ட நிபந்தனை

—6 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் சுதந்திரமாக வாழ வேண்டும் என்கிறுர் திவாரி

(கல்கத்தா)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குசமாதானமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும். டிசம்பர் 19 ஆம் திகதி யோசனைகளின் அடிப்படையில் தமிழ்ப் போராளிகளும் இலங்கை அரசும் இதற்கு தீர்வு காணவேண்டும் என பாரத வெளியுறவு அமைச்சர் திரு. என். டி. திவாரி செய்தியாளரிடம் கூறினுர்.

ஜப்பான் பயணமாகு முன்பு அவர் கல்கத்தா விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசினுர்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தெளிவாக இருக்கிறது எனவும் அவர்

—6 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டணி டில்லிக்கு அழைப்பு; மீண்டும் பேச்சுக்கு முயற்சி!

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் ஈடுபடுத்தும் முயற்சிகளில் இந்திய மத்திய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்காக கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திருமலை முன்னுள் உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை டில்லி செல்லும் இக்குழுவினர் வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங், உள்ளூர் பாதுகாப்பு அமைச்சர் ப. சிதம்பரம், வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனன் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக

—6 ஆம் பக்கம் பார்க்க

மாநகர ஆணையாளர் கூறுகிறார்:

# எதையும் தாங்கும் இதயசக்தி தமிழருக்கு மட்டுமேயுண்டு!

"உலகில் உள்ள மக்களுக்குள் தமிழர்கள் எந்தப்பிரச்சினையையும் தாங்கிக் கொள்ளும் மனோவல்லமை உடையவர்கள். அதனாலேயே இன்றும் இலங்கையில் தமிழர் தொடர்ந்தும் வாழக்கூடியதாயிருக்கின்றது. எந்த நோக்கத்திற்காக தமிழ்மக்கள் அகதியாக்கப்பட்டார்களோ அந்தநோக்கம் நிறைவேற்றப்பட நாம் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது"

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினரால் (83) பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இவ்வைபவம் நேற்றுக்காலை யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு ஆணையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் "முன்னர் வெளிமாவட்டங்களில் இருந்து இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டு வந்த மக்களை யாழ்ப்பாண மக்கள் இங்கு குடியமர்த்தி உதவிவழங்கி உபசரித்தனர் இபபோது இங்குள்ள மக்களே அதுவும் சொந்தமண்ணிலே அகதியாகும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர். தமிழ் மக்கள் எவரைப் பார்த்தாலும் அவர்கள் ஏதோ ஒருவகையில் அகதியாகவே உள்ளனர். யாரை யார் தேற்றுவது என்ற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. எபது பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிட்டினாலுங்கூட 2000 ஆண்டுகள் வரையாவது புனர்வாழ்வு தொடர வேண்டிய அளவிற்கான பாதிப்புக்கள் இப்பொழுதே எமக்கு ஏற்பட்டுவிட்டன" என்று தெரிவித்தார்.

ஒய்வு பெற்ற அரசாங்க அதிபர் திரு. சிவஞானம், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஆசீர்வாதம், அகதிகள் புனர்வாழ்வு நிதியவெளிக்கள உத்தியோகத்தர் டபிள்யூ. வி. இராஜன் நவரட்ணம் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர். குடும்பத்தில் பிரதான உழைப்பாளரை, தலைவரை இழந்த 25 பேருக்கு தையல் மெஷின்களும், நான்கு பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும், இருவருக்கு மீன்பிடி வலைகளும், ஒருவருக்கு மாட்டு வண்டிலும், ஐவருக்கு பால் மாடுகளும், பத்து பேருக்கு வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான காசோலைகளும் நேற்றைய வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதற்கென நொவிப் தொண்டர் நிறுவனம் மூன்று லட்சம் ரூபாவை அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்கு (83) வழங்கியிருந்தது.





சேவை

பிடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், பாம் முட்டைகள் இவ் அனைத்தையும பெற்றுக் கொள்ளலாம். சீமாட்டி சுமங்கலி, 531, பலாலி வீதி, திருநெல்வேலி. 05046




இம் மாதம் 22-ம், 23-ம், 24-ம் திகதிகளில் பகல் 9மணியளவிலிருந்து ஏராளமான பொருட்கள் கோப்பாய் பொதுச்சந்தையில் (சந்திக்கருகாமையில்) ஏலத்தில் விற்பனையாகும். பொருட்களை இப்பொழுதே பார்வையிடலாம். பொருட்களின் முழுவிபரங்களுக்கும் முத்திரைக்கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், கோப்பாய் 05030



UNIVERSITY OF JAFFNA

TENDER NOTICE

Tenders are invited from Contractors registered for Rs. 50,000/- or over for civil works with University of Jaffna or Department of Buildings for the construction of "Proposed semi - permanent cooking area for the Canteen".

Tender forms and drawings may be obtained from Works Engineer, University of Jaffna on payment of Rs. 100/ until 21-5-87.

Tenders should be received on or before 29-5-87 at 10-00 a. m.

Registrar,
University of Jaffna. 05042



## இடமாற்ற அறிவித்தல்

எமது காரியாலயம் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது ஆதரவாளர்களுக்கும, அன்பர்களுக்கும் அறியத்தருகிறோம்

மதுரா வீடியோ கிளப், இல. 96, 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியிலிருந்த எமது நிறுவனம் தற்போது

97/1, பருத்தித்துறை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் அமைந்துள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய நேரம்
காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

★ குவைத் ★ சவூதி
★ ஓமான் ★ டோகா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும். கடித மூலம் தொடர்பு கொள்ளவிரும்புவோர் முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகல விதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் கடவுச்சீட்டு (PASSPORT) குறைந்த செலவில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

HORIZON Enterprises

A. பத்மதாஸ்

இல. 97/1, பருத்தித்துறை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 05043

குறிப்பு: எமக்கு வடபகுதியில் வேறுகிளைகள் கிடையாது. எந்தக்காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.



## பிரயாண ஒழுங்குகள்

● நோர்வே
● U. K.
● கனடா

ஆகிய நாடுகளுக்கு உடன் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். எம்மிடம் பதிந்தோர் யாவரும் பிரயாணம் மேற்கொண்டு முடிந்தது.

அத்துடன்:-

● சவூதி அரேபியா ● குவைத்
● டோகா ● கட்டார்
● சிங்கப்பூர்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்கு உடன் செய்து தரப்படும். சகலவிதமான வெற்றிடமும் எம்மிடம் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| Labourer | - 600 S R. | House Driver | - 600 S.R. |
| Carpenter | - 550 S.R. | Mason | - 550 S R. |
| Shuttering Carpenter | -700 S.R. | Bar Binders | - 700 S.R. |
| Painters | -750 S.R. | Construction Labourer | - 450 S.R. |

இரண்டு வாரங்களில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

விபரங்கட்கு:-

ROSHAN

Kopay Junction, Kopay. 05045



## பிரயாணத்திற்கு தயாராகுங்கள்

★ London
★ Norway ★ Germany
★ France ★ Canada

QATAR ( Open Visa)

1. Labourers – 450 Q.R
2. Carpenters - 700 Q.R
3. Masons – 700 Q.R
4. Painters - 750 Q.R

நோர்வே செல்வதற்கு துரித கதியில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

SINGAPORE

1. Labourers (Building Construction & Shipyard)
2. House Maids

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ - மானிப்பாய் 05026

எமக்கு வேறு கிளைகள் கிடையாது.

## நல்வாக்கு

புத்திசாலியான ஒருவன் தனக்குச் சம்பந்தமில்லாததை ஒதுக்கி விட வேண்டும்.

பஞ்சதந்திரப் பொன்மொழி

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## சந்திரசேகரா மனமாற்றம் புத்தம் சரணம் கச்சாமி

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அராஜக நடவடிக்கைகள் காரணமாக இந்நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழினம் அனுபவித்துவரும் இன்னல்கள், தொல்லைகள், சித்திரவதைகள், உயிரிழப்புகள் வரலாற்றின் அழியாச் சின்னங்களாக இடம் பெற்றுள்ளன.

தமிழினத்தை அழிப்பதற்காக ராணுவப் படைகளையும் மனிதாபிமானமற்ற, மனித தர்மத்துக்கு அப்பாற்பட்ட வகையில் ஸ்ரீலங்கா அரசு துன்புறுத்திப் பயன்படுத்தி வருகின்றதென்ற ரகசியம் இப்போது வெளியே தெரிய வந்துள்ளது.

வாழ்க்கையில் வறுமையாலும், ஏழைப் பெற்றோரைப் பராமரிக்க முடியாமையாலும் ராணுவத்தில் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள், அவர்களது மனச்சாட்சிக்கு எதிராகச் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பது பரம ரகசியமாகியுள்ளது.

பலாலி முகாமிலிருந்து தப்பியோடி புலிகளிடம் சரணடைந்துள்ள சந்திரசேகரா என்ற ராணுவச் சிப்பாய் மூலமே இந்தத் தகவல்கள் வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளன.

குறுகிய கால லீவில் வீடுகளுக்குச் சென்ற நூற்றுக்கணக்கான சிங்கள ராணுவச் சிப்பாய்கள் மீண்டும் முகாம்களுக்குத் திரும்பவில்லை என்பது எதனை எடுத்துக் காட்டுகின்றது?

வருடப்பிறப்போ, வெசாக்கோ, திருமணமோ, மரணச் சடங்கோ - எதுவானாலென்ன; ராணுவச் சிப்பாய்களுக்கு வீடு செல்ல லீவு கிடையாது.

இரவு பகல் கட்டாய சேவை.

தமது வேலைக்கான முழுச் சம்பளத்தையுமே இவர்கள் கண்ணால் கண்டது கிடையாது.

''சென்றி''யில் நிற்கும் ராணுவத்தினர், வீதியால் செல்லும் அப்பாவிப் பொதுமக்கள் மீது தயவு தாட்சணியமின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டும்.

ராணுவ வார்த்தையில் சொல்வதானால் ''தமிழர்களைக் கண்டால் நாய்களைச் சுடுவதுபோலச் சுட்டுத்தள்ள வேண்டும்'' என்பது ஸ்ரீலங்கா அரசு, சிங்களச் சிப்பாய்களுக்கு வழங்கியுள்ள கடுமையான உத்தரவு.

காசுக்காக ராணுவத்தில் சேர்ந்த போதிலும், மனச்சாட்சிக்கு விரோதமாக, இனப்படுகொலையைச் செய்ய விரும்பாத சிங்கள ராணுவத்தினரும் இருக்கிறார்கள் என்பதற்கு சந்திரசேகரா நல்லதொரு உதாரணம்.

சேவையிலிருந்த ஆறு மாத காலத்தில் சந்திரசேகரா ஒரு தமிழரையாவது கொலை செய்திருக்க மாட்டாரா என்றும் சிலர் கேட்கலாம்.

ஒன்றல்ல, அதற்கு மேலானவர்களையும் தமது துப்பாக்கி மூலம் சந்திரசேகரா கொலை செய்திருக்கலாம்.

ஆனால் அத்தனை செயல்களையும் தமது மனச்சாட்சிக்கு எதிராகச் செய்ததை அவரும் உணர்ந்துள்ளதால் அவரை ஒரு மனிதராக மதிக்க வேண்டியது தர்மத்தின்பாற்பட்ட கடமை.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் கூட்டமாக நிற்கும் இடங்கள்மீது வானத்தாக்குதல் இலக்குப் பார்த்து நடத்தப்படுவதை குறிப்பிட்ட வானலையில் ரேடியோ மூலம் நாமே கேட்கமுடிகின்றது.

கடந்த மாதம் நீர்வேலி கந்தசாமி கோவில் உற்சவத்தின்போது நடத்தப்பட்ட தாக்குதலும், நேற்று முன்தினம் தாவடி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவின்போது நடத்தப்பட்ட தாக்குதலும் ஆலயங்கள் மீது இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகும்.

ஆஸ்பத்திரிமீது குறிபார்த்து நோயாளிகளை நித்திரையில் வைத்தே கொலை செய்பவர்களுக்கு கோவில் என்ன, குளம்தான் என்ன?

மனச்சாட்சிக்கு எதிராக ராணுவத்தில் பணிபுரிய விரும்பாத மேலும் பல சிப்பாய்கள், வெளியேவர விரும்புவதாக சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சரணடையும் சிப்பாய்களுக்கு பாதுகாப்பு வழங்க புலிகள் முன்வந்துள்ளனர்.

அதேவேளையில் தப்பிவந்த சந்திரசேகரா பௌத்த பிக்குவாக மாற விருப்பம் கொண்டுள்ளார்.

ஆனையிறவைத் தாண்டும்போது மஞ்சள் உடையுடன், பௌத்த தர்மத்தைப் போதிக்கும் சிஷ்யனாக செல்ல சந்திரசேகரா விரும்புகின்றான்.

புனித வெசாக் காலத்தில் ஏற்பட்ட நல்லதொரு மனமாற்றமாகவே இது எமக்குப் படுகின்றது.

புத்தம் சரணம் கச்சாமி!

# பல்கலை விரிவுரையாளர்கள் பணயக் கைதிகளான நாடகம்

உலக தொழிலாளர்களின் ஒற்றுமைத்தினம் எனவும், உரிமைத்தினமெனவும் கொண்டாடப்படும் மே தினத்தில் இருவர் உயிர் இழக்க நேரிட்டது பாரதூரமானதும் வேதனையும் தரும் சம்பவமாகும்.

சிக்காக்கோ நகரில் 101 வருடங்களுக்கு முன்னர் இரத்தம் சிந்தித்தான் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற்றார்கள். அவர்கள் உரிமைபெற்ற அதே தினத்தில் இலங்கை தலைநகரில் மனிதக் கொலைகளும் இரத்தக் களரியும் ஏற்பட்டு விட்டன.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரைத் திடலில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தின் பின் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினால் இரு இளைஞர்கள் துடிதுடித்து இறந்தனர். இறந்தவர்களில் ஒருவர் பாணந்துறை குருப்பு முல்லையைச்சேர்ந்த சிகித்சிறி மெவன்ரண்வக (வயது24) என்பவராவார். இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தில் இறந்த மற்றைய இளைஞர் சபுகஸ்கந்தை எண்ணெய் கூட்டுத்தாபன ஊழியரான கிரிபத்கொடை லெஸ்லி ஆனந்தலால் (வயது 39) என்பவராவார்.

தெமட்டக்கொடை பொலிஸ் நிலைய அதிகாரி காமினி ஜயசூரியா தெரிவித்தார்.

கண்டியில் அரச எதிர்ப்புப் பிரசுரங்களைக் கொண்ட பை ஒன்றுடன் ரயில் நிலையத்தில் நடமாடிய பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

மாணவர்கள் குழப்பங்கள் எதனையும் விளைவிக்காமல் இருக்க கொழும்பிலும் சுற்றுப் புறத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரைப் பகுதியில் பொலிஸாரின்ரோந்துச்சேவைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள்பல்கலைக்கழகவளவுக்கருகாகச் செல்லும்போக்குவரத்து சபை பஸ் வண்டிகளை மறித்து அவற்றின் மேல் அரச எதிர்ப்புச் சுலோகங்களைஎழுதி அனுப்புகின்றனர். தார், சுண்ணாம்பு, பெயின்ட் வகைகளை பயன்படுத்தியே சுலோகங்கள் எழுதப்பட்டன.

பேராதனை பல்கலைக்கழக பாதை ஊடாக செல்லும் பஸ்கள் வேறுபாதைகளுக்கூடாக திருப்பி விடப்படுகின்றன.

மாத்தறை ருகுணுப் பல்கலைக்கழகத்தில் நிலவிய பதற்

# கொழும்பு றவுண்ட்அப்

பல்கலைக்கழக மாணவனின் மரணத்தை தொடர்ந்து மற்றைய பல்கலைக்கழக மாணவர்கள் கவலையும், ஆத்திரமும் அடைந்துள்ளனர். கொழும்பு, களனி, மொறட்டுவை, பேராதனை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தும் பல்கலைக்கழக வளவுக்குள் கட்டங்களையும்,ஊர்வலங்களையும் நடாத்தியும் வருகின்றனர்.

ஒவ்வொரு பல்கலைக்கழகங்களைச் சுற்றியும் கலகமடக்கும் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தை பொலிஸார் கண்ணீர்ப் புகை வீசிக்கலைத்தனர். கட்டுப்பெத்த சந்தியில் நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் 1200மாணவர்கள் கலந்து கொண்டனர். இச் சம்பவத்தின் போது பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக வளவிற்குள் அரச எதிர்ப்பு சுலோகங்களைத்தீட்டிக்கொண்டிருந்த எட்டுப் பேரை பொலிஸார் மே மாதம் 3ஆந் திகதி கைது செய்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் பௌத்த பிக்குகள் நால்வரும் ஒரு யுவதியும் அடங்குகின்றனர். இப்பல்கலைக்கழக மாணவர்களை கறுவாக்காட்டுப் பொலிஸாரே கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் இடதுசாரி இயக்கமொன்றைச் சேர்ந்தவர்கள் என அரசு கூறுகின்றது. இதே வேளை தெமட்டக்கொடையில் நான்கு மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். நகரில் பிரபல கல்லூரிகளில் கல்வி பயிலும் இவர்கள் பிரசித்தமான மதில்ஒன்றில் அரசு எதிர்ப்புச் சுலோகங்களை ஒட்ட முயற்சித்தபோது ரோந்து சென்ற பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர் என

றத்தைத் தொடர்ந்து இப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பி. சமரவிக்ரமா தெரிவித்தார். கடந்த ஏப்பிரல் 27 ஆந்திகதியே பல்கலைக்கழகம் ஆரம்பமாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களினால் மே ஐந்தாந் திகதி பணயக் கைதுகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து விரிவுரையாளர்கள் எட்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் விடுதலையாகியுள்ளனர்.

கடந்த மே மூன்றாந் திகதி பொலிஸாரினால் கைது செய்த எட்டு கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யக் கோரியே விரிவுரையாளர்கள் பணயக் கைதிகளாக

**உதரன்**

தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மே 5 ஆம் திகதி காலைவழமை போல கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்ள வந்தனர். அதன் பின்னர் 300க்கும் அதிகமான பட்டதாரி மாணவர்கள் பகல் ஒரு மணியளவில் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குள் புகுந்து ஐந்து விரிவுரையாளர்களையும் பலவந்தமாக பிடித்து பணயம் வைத்தனர். பணயம் வைக்கப்பட்ட விரிவுரையாளர்களில் ஒருவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ரஞ்சன் பொன்சேகா (தாவரவியல் பிரிவு அதிபர்) கலாநிதி எச். என். டி. சில்வா (தாவரவியல் பிரிவு விரிவுரையாளர்) டாக்டர் டபிள்யூ பி. கே. பி. விக்கிரசிங்க (சிங்கள விரிவுரையாளர்) கலாநிதி சந்திரசேன (தாவரப் பிரிவு விரிவுரையாளர்) கலாநிதி சாரியா டி. சொய்சா (சட்டப்பிரிவு விரிவுரையாளர்) ஆகியோரையே மாணவர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர்.

பொலிசார் பல்கலைக்கழக வளவிற்குள் பிரவேசித்தால் பொலிசாரைத் தாக்குவதற்கென மாணவர்கள் கைக்குண்டுகள், அசிட் நிரப்பப்பட்ட போத்தல்கள் வேறு சில ஆயுதங்கள் சகிதம் தயார் நிலையில் இருந்தனர்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இறுதியில் மாணவர்களுக்கும் கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தருக்கும்இடையில்பேச்சுவார்த்தை நடைபெற்றது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்யும் பொறுப்பு சட்டத்துறையைச் சார்ந்தது என மாணவர்களுக்கு உபவேந்தர் எடுத்துக் கூறியதை அடுத்து பணயக் கைதிகளை இரவு 7 மணியளவில் விடுதலை செய்ய மாணவ பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

இதன் பின்னர் மைதானத்தில் கூடியிருந்த மாணவர்கள் ஐந்து பேராக வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். பல்கலைக்கழக வாயிலில் விரிவுரையாளர்களை அழைத்துச் செல்ல அவர்களது குடும்பத்தினர் காத்திருந்தனர். மாணவர்கள் எல்லோரும் வெளியேறிய பின் பணய விரிவுரையாளர்கள் வெளியேறினர். அவர்கள் வெளியில் காவலுக்கு நின்ற பொலிஸாரைப்பார்த்து நன்றிப் புன்னகை பூர்த்த வண்ணம் வெளியேறினர்.

இதேவேளை பொலிஸ் மா அதிபருக்கு பணய விவகாரம் பற்றி எழுத்து மூலமாக பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர். பணய நாடகத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை பணித்ததாக பொலிஸ் மா அதிபர் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

மே ஐந்தாம் திகதி பணய நாடகம் முடியும்வரை கொழும்பு தெற்கு பொலிஸ் அத்தியட்சகர் ரோய் குணவர்த்தன, கறுவாக்காட்டு பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் எஸ். சாந்திக்குமார் ஆகியோர் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் நின்று நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மே 5 ஆம் திகதி நடந்தது போல பேராதனை, மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் மே 7 ஆம் திகதி மேற்படி பல்கலைக்கழகங்களின் பல விரிவுரையாளர்களும் அதிகாரிகளும், ஊழியர்களும் மாணவர்களால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மே ஆறும் திகதி பகல் 11 மணியளவில் சுமார் 1000 மாணவர்கள் செனட் கட்டிடத்தை சுற்றிவளைத்து அங்குள்ள 250 பேரை பணயக் கைதிகளாக்கினர்.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் நிதி சேகரித்தபோது கைது செய்யப்பட்டனர் ஹங்குராங்கத்த, கலகெதர, கலஹா ஆகிய பொலிஸ் நிலையங்களில் கைது செய்யப்பட்ட மேற்படி பேராதனைபல்கலைக்கழகமாணவர்களை விடுதலை செய்யக்

...4 ஆம் பக்கம் பார்க்க

மன்னாரில் இருந்து

# சங்குப்பிட்டி பஸ்சேவை மீண்டும் ஆரம்பமானது

(அரியாலை)

மன்னார்-சங்குப்பிட்டி பஸ் சேவை மீண்டும் இம்மாதம் 8 ஆம்திகதியில் இருந்து நடைபெற்று வருகிறது. முதலாவது பஸ் காலை 6 மணிக்கும், இரண்டாவது பஸ் காலை 8.30 மணிக்கும் மன்னார் நகரில் இருந்து புறப்பட்டுச் செல்கின்றன. இரண்டாவது பஸ் பூநகரியில் தங்கி மறுநாள் மன்னாருக்குச் செல்கிறது. வழியில் கறிச்சட்டிப் பாலம், பள்ளமடு, இலுப்பைக்கடவை, நாலாம் கட்டை ஆகியவற்றில் சோதனை நடைபெறுகிறது. வெள்ளாங்குளத்தில் முகாம் எதுவும் இல்லை.

கடந்த 9 ஆம் திகதி மன்னாரில் இருந்து புறப்பட்ட முதலாவது பஸ் தாமதமாக பிற்பகல் சுமார் 1.45மணியளவிலேயே சங்குப்பிட்டியை வந்தடைந்தது. பள்ளமடுவுக்கும், இலுப்பைக்கடவைக்கும் இடையில் படையினர் நடைபவனி சென்றதே இத் தாமதத்திற்கு காரணமாம்.

கடந்த 27-ஆம் திகதி மன்னார் சங்குப்பிட்டி வீதியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து போக்குவரத்துச் சபை பஸ்ஸில் வந்த சிலர் ராணுவத்தாக்குதலுக்கு இலக்கானதால் இந்த பஸ்சேவை இடைநிறுத்தப் பட்டிருந்தது.

இதேவேளை மன்னாரில் இருந்து அனுராதபுரம், மதவாச்சி ஆகிய இடங்களுக்கு எதிர்வரும் 18 ஆம்திகதிதிங்கட்கிழமைமுதல் புதியபஸ் சேவைகள் நடாத்தப்படவுள்ளன.

உதவி அரச அதிபர் உரை

# தாங்களாகவே சிந்தித்து இளைஞர் செயற்படவேண்டும்

(உடுவில்)

படித்துவிட்டு வேலைவாய்ப்பு இன்றி இருக்கும் இளைஞர்களையும், யுவதிகளையும ஒன்றிணைத்து சமூகத்தில் அவர்களைப் பொருளாதார அடிப்படையில் மேம்படுத்துவதே தேசிய சேவைகள் இளைஞர் கழகத்தின் நோக்கமாகும். இக்கழகத்தில் அங்கத்தவர்களாக சேர்பவர்கள் நிஸ்கோ திட்டத்தின் கீழ் சுயமுயற்சிக்கு கடன்பெற வாய்ப்புண்டு. வளர்ச்சியடைந்த நாடுகளில் இளைஞர்களும் யுவதிகளும் தாமாகவே சிந்தித்து குழுவாக இயங்கி வேலைவாய்ப்பினைத் தேடிக்கொள்கின்றனர்.

இவ்வாறு உடுவில் தேசிய சேவைகள் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் உரையாற்றிய உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்

செல்வன் எஸ் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அடுத்து உரையாற்றிய தேசியசேவை மன்ற அதிகாரி திரு. எஸ். கார்த்திக் குறிப்பிடுகையில்;

பதினேழு வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இதில் அங்கத்தவர்களாக சேரலாம். இதன் மூலம் பெண்கள் நடமாடும் பயிற்சி நிலையத்தில பயிற்சிபெறுதல், பிரான்ஸிய மொழி கற்பதற்கு வாய்ப்பு போன்ற நன்மைகளைப் பெறலாம், பட்டுப்பூச்சி வளர்ப்பு, தும்பிலிருந்து பொருட்கள் தயாரித்தல் என்பனவற்றிற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கத்துவப்பணமாக 22 ரூபா செலுத்துவதன் மூலம் நிஸ்கோ கடன் பெறவாய்ப்புண்டு என்றார்.

சம்மேளன உபதலைவர் பெ. அருடசோதி, மானிப்பாய் பிரிவு முதலுதவிப்படை அத்தியட்சகர் திரு. மகாலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர் செல்வி ச. வளர்மதி நன்றி கூறினர்.

பல்கலை .-

...3ஆம் பக்கத் தொடர்

கோரியே இவர்கள் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டனர்.

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டதைத்தொடர்ந்து மே ஆறுந்திகதி மாலை 6.30 மணியளவில் பணய நாடகம் முடிவுற்றது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மே ஆறுந்திகதி 11 மணியளவில் விரிவுரையாளர்கள் உட்பட ஊழியர்களையும் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர் மே ஆறுந்திகதி இரவு பொலிசார் ஜெயவர்த்தனபுர மாணவர்களை விடுதலை செய்ததை தொடர்ந்து மே ஆறுந்திகதி இரவு ஒரு மணியளவில் பணயக்கைதிகளைமாணவர்கள் விடுவித்தனர் இப்பணய நாடகம் 14 மணி நேரம் நீடித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பல்கலைக் கழகம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம இரண்டிலும் விரிவுரைகள் இக்கட்டுரை எழுதும் வரை ஆரம்பிக்கப்படவில்லை.

விரிவுரையாளர்களின் பாதுகாப்பை மாணவர்கள் உறுதிப்படுத்தும் வரையில் விரிவுரையாளர்கள் தங்களது தீர்மானத்தை மாற்றமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

விரிவுரையாளர்களின் நடவடிக்கைகளினால் சுமார் 1,500 க்கு மேற்பட்ட மாணவர்களது மகாபொல புலமைப் பரிசில் பாதிக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. இப்புலமைப் பரிசில் தொடர்பாக விரிவுரையாளர்கள் மாணவர்களை சிபார்சு செய்ய மறுப்பதே காரணமாகும்.

பேராசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மீது மாணவர்கள் மேற்கொண்ட பணயக் கைதி நாடகத்தைக் கண்டித்து ஜெயவர்த்தனபுர கொழும்பு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கண்டன அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்கள்.

பல்கலைக்கழக நெருக்கடிகள் இப்போது வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் பல்கலைக் கழகங்களில் உளள விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் மத்தியில் அச்சமும் பீதியும் நிலை பெற்றிருக்கின்றன

கற்பவர்களுக்கும் கற்பிப்பவர்களுக்குமிடையே உறவுகள் பாதிக்கப்பட்டு விட்டன. பரஸ்பரம் அவநம்பிக்கையும் அச்சமும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் விரிவுரையாளர்கள் ஒழுங்காகக் கற்பிப்பதும் மாணவர்கள் சீராகப் படிப்பதும் எப்படி?

விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே குரு-சிஷ்ய உறவும் அன்னியோன்ய இணைப்பும் பாசமும் இருக்க வேண்டும். அப்போது தான் பல்கலைக்கழகக் கல்வி பெருமைப்படத்தக்கதாகவும் பயனுடையதாகவும் இருக்கும். எது எப்படி இருப்பினும் மாணவர்கள் தமது செயல்களில் வெற்றிகண்டு விட்டார்கள்.

இதே நேரம் எமக்கு இறுதியாகக் கிடைத்த ஊர்ஜிதமற்ற தகவல்களின்படி மே 22 ஆம் திகதி அதாவது இலங்கை தேசிய வீரர்கள் தினத்தில் மே தினத்தன்று இறந்த இருவரையும் தேசிய வீரர்களாக நினைவு கூரப் போவதாக கூறப்படுகின்றன.

பல்கலைக்கழக போராட்டம் தொடருமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ராணுவ நடவடிக்கைகளால்

# காங்கேசன்துறை வட்டார பாடசாலைகள் இயங்காத நிலை

(அச்சுவேலி)

கட்டுவன் ஞானோதய வித்தியாலயத்தில் ராணுவம் முகாம் அமைத்ததைத் தொடர்ந்தும், காங்கேசன் துறை - பலாலிவீதியில் ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுவதினாலும் அப்பகுதிகளில் உள்ள பல பாடசாலைகள் இயங்க முடியாமலும், சில பாடசாலைகளில் மாணவர்களது வரவு குறைவாகவும் காணப்படுகின்றன.

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம், பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம், ஊறணி கனிஷ்ட மகா வித்தியாலயம், காங்கேசன்துறை மகா வித்தியாலயம், காங்கேசன்துறை றோ.க வித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி என்பன முற்றிலும் இயங்காமல் உள்ளன.

இவற்றின் மாணவர்கள் வேறுபாடசாலைகளில் கல்வி பயில தற்காலிக அனுமதியினைப் பெற்றுச் சென்றுள்ளனர் ஆசிரியர்கள் காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் கடமைக்குச் சென்றமைக்காக ஒப்பமிட்டு தமது வரவுகளை பதிகின்றனர்.

வீமன்காமம் மகா வித்தியாலயம், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம், வறுத்தலைவிளான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பனவற்றில் மாணவர்களின் வரவு கணிசமான அளவில் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி ஞானோதய வித்தியாலயம், தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியில் பகுதிநேரப் பாடசாலையாக மிகக்குறைந்தளவு பிள்ளைகளுடனும், குரும்பசிட்டி பொன். பரமானந்த மகா வித்தியாலயம், குப்பிளான் ஞானோதய வித்தியாலயத்தில் பகுதி நேரப் பாடசாலையாகவும் இயங்குகின்றன.

# வெடிகுண்டுகள், துப்பாக்கி பாகங்களை பொலிஸார் கண்டியில் கண்டுபிடித்தனர்

கண்டிப் பகுதியிலுள்ள பூஜாப்பிட்டிய என்ற இடத்தில் வெடிகுண்டுகள், துப்பாக்கிகளின் பாகங்கள் என்பனவற்றை மறைவிடம் ஒன்றில் இருந்து கட்டுகஸ்தோட்ட பொலிஸார் கடந்த திங்கள் கண்டுபிடித்தனர்.

பொலிஸார் குண்டுகளை வெடிக்கவைத்தனர். துப்பாக்கி பாகங்களை ராணுவத்தின் விசேட பிரிவினர் ஆராய்ந்து வருகின்றனர். இதுதொடர்பாக எவரும் கைதாகவில்லை. ஜே. வி. பி. இயக்கத்தினர் மீது சந்தேகம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளையில் கடந்த ஞாயிறு மதகு ஒன்று குண்டு வெடித்து சேதமாக்கப்பட்டதும் இப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தவாரம் கண்டிப்பகுதியில் தமிழ்த் தீவிரவாத, ஜே. வி. பி. இயக்கங்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட கடிதங்கள் சிலருக்கு அனுப்பப்பட்டது தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

யாழ்நகர்ப் பகுதியில்

# மக்கள் இடம் பெயர்வால் தபால்கள் திரும்புகின்றன

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் கடைவீதிப் பகுதியில் உள்ள வீடுகள், கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு செல்லும் தபால்கள் யாவும் கடந்த சில தினங்களாக பிரதம தபாலகத்திற்கு திரும்பி வந்து கொண்டிருப்பதாக தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்நகர்ப் பகுதியில் உள்ள கடைவீதிப் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அற்றுப் போனதாலும், பாதுகாப்புக் கருதி வர்த்தக நிறுவனங்கள், கடைகள் திறக்கப்படாததாலும் இக் கடிதங்கள் விநியோகிக்க முடியாது திரும்பி வந்துகொண்டிருக்கின்றன.

திறக்கப்படாத கடைகளின் உரிமையாளர்கள், குடிபெயர்ந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது கடிதங்களைத் தபால் நிலையத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. எஸ். பராசசிங்கம் தெரிவித்தார்.

# பல்கலை மாணவர் ஆங்கில பாடநூல் வந்துவிட்டது

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் பல்கலைக்கழக புகுமுக ஆங்கில வகுப்புகளை நடாத்துவதற்குத் தேவையான பாடநூல்கள் கல்விச் சேவைகள் அமைச்சு அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது.

வவுனியா மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் அனுராதபுரத்தில் இப் புத்தகங்களைப் பொறுப்பேற்று வவுனியாவிற்கு அவற்றைக் கொண்டு வந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். வவுனியா மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வே. சபாநாயகம் இந்நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை செய்தார்.

ஆணையாளர் சொன்னது:

# கடுமையான உழைப்புக்கு பலன் நிச்சயம் கிடைக்கும்

உண்மை, நேர்மை, கடமையுணர்வு கடவுள் மேல் வைத்த பற்றுமே நான் சமகாலத்தில் எனது கடமை இலக்கை நோக்கி அடைய முடிந்தது என்று யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் முதலாம் தர ஆணையாளராக பதவியுயர்வு பெற்றதற்கு மாநகர சபை மின்சார, இறைவரி ஊழியர்களால் வழங்கப்பட்ட தேநீர் உபசார விருந்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய ஆணையாளர் உள்ளூராட்சி சேவையில் இருப்பவர்கள் குறைவானவர்கள் எனசிலர் எண்ணுகிறார்கள். பலரிடம் பலதரப்பட்ட தப்பபிப்பிராயங்கள் நிலவுகின்றன. மற்றைய அரசாங்க சேவை போல சரிசமனாக மேலும் கூடியளவு மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட வாய்ப்புள்ள சேவை உள்ளூராட்சி சேவையே என்பதையிட்டு சகலரும் பெருமைப்பட வேண்டும்.

சகல அரச சேவைகளைப் போல உள்ளூராட்சியிலும் அதிகாரங்கள், சம்பளங்களில் எந்தவித வித்தியாசமுமில்லை. ஏனைய சேவையிலும் பார்க்க மக்களுடன் நேரடியாகக் கூடுதலாக தொடர்பு கொண்டு ஆற்றும் சேவை இதுவாகும். உள்ளூராட்சி சேவையில் சோர்ந்த நான் இலிகிதராக இருந்து படிப்படியாக ஒவ்வொரு பதவியிலிருந்து, நான் கடமை நேரம் பாராது கடமையே ஒரு குறிக்கோளாக இருந்து கடமையாற்றிய படியினால் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன். என்னைப் போல கடமையாற்றும் இளம் உத்தியோகத்தர்கள் ஒரு இலக்கை நோக்கி முன்னுக்கு நிச்சயமாக வரவேண்டும் என்றார்.

பல உத்தியோகத்தர்கள் ஆணையாளரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

## விவாக பதிவாளர் நியமனம்

(அரியாலை)

மன்னார் மாவட்டப்பதிவாளர் பணிமனையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் திரு. கா. பாலசுந்தரம் மன்னார் பகுதி விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ளார். 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான ஓராண்டு காலத்திற்கு இவர் இப்பதவியை வகிப்பார். கைதடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் முன்பு யாழ். மாவட்டப் பதிவாளர் பணிமனையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## ராணுவத்தினர் எடுத்தனர்

(அச்சுவேலி)

இதுவரை காலமும் காங்கேசன்துறைசீமெந்துக்கூட்டுத்தாபனத்தினதும் லங்கா சீமெந்து லிமிடெட்டினதும்பொறுப்பில் வைக்கப்பட்டு காங்கேசன்துறை துறைமுக மகஸீன்முகாமின் இராணுவப்பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள், எக்ஸ்புளோடர்க் கருவி முதலியனவற்றை காபர்வியூ முகாம் இராணுவம் முற்றிலும்தனது பொறுப்பில்எடுத்துச் சென்றுள்ளது.

# பொசுப் பொழுது

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க நிலையமொன்றின் தலைமை அதிகாரி பத்திரிகையாளருடன் அடிக்கடி கொதித்து விழுகின்றார்.

பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே இந்த நிலையம் இயங்குகின்றது. எனவே பத்திரிகைகளுக்கும் இந்த நிலையத்துக்குமிடையே சௌஜன்யமான உறவு இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

ஆனால் அந்தத் தலைமை அதிகாரிக்கு இப்போது கொஞ்ச நாட்களாக பத்திரிகையாளர்களைக் கண்டால் ஏனோ வெறுப்புத் தலைதூக்குகின்றது.

பகிரங்கமாகக்கூட பத்திரிகையாளர்களை இவர் எச்சரிக்கத் தொடங்கியுள்ளார்.

அந்த அதிகாரிக்கு பல தொல்லைகள் இருப்பதை நாமறிவோம். அவருடன் கூட இருப்பவர்களின் தொல்லைகளும் அவருக்குண்டு.

அதற்காக பத்திரிகையாளருடன் பாய்ந்து விழுவதால் தொல்லை நீங்கிவிடுமா?

'பாவம்' என்று சொல்வதைத்தவிர பத்திரிகையாளர் வேறென்னதான் செய்ய முடியும்!

❀ உக்கிரன்

# பிஜியில் இராணுவப் புரட்சி
# பிரதமர் கடத்தப்பட்டார்!

(சூவா)

தென்மேற்கு பசுபிக் பிராந்திய தீவான பிஜியில் இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் அந்நாட்டின் அரச இராணுவம் தேசிய பாராளுமன்றக் கட்டிடத்துள் திடீரெனப் புகுந்து பிரதமரையும் அவரது அமைச்சரவை சகாக்களையும் இனந்தெரியாத இடமொன்றுக்கு கடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைகள் மேலும் எழாமல் தடுக்கும் நோக்குடன் ஆயுதந் தாங்கிய இராணுவம் சூவா நகர வீதிகளில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவப் புரட்சியைத் தலைமைதாங்கி நடத்திய லெப்டினன்ட் கேர்ணல் றெம்போர் கர் கவர்னரைச் சந்தித்து தமது இராணுவ ஆட்சியை அங்கீகரிக்குமாறு கேட்டுள்ளதாக அங்குள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தகவல் வெளியீடு தெரிவித்துள்ளது. நாட்டு மக்களை அமைதியாக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அந்தத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் டிபெஸ்தி வாத்ரா அவரது அமைச்சரவைச் சகாக்களுடன் கடந்த வாரமே பொதுத் தேர்தல் மூலம் பதவிக்கு வந்தார். இந்திய இனத்தவர்களின் பெரும் பான்மைப் பலத்துடனேயே பவாத்ரா பதவிக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அடையாளஅட்டை வழங்க அஸாம் அரசு தீர்மானம்

(கோஹார்த்தி)

அஸாம் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க அந்த மாநில அரசு தீர்மானித்துள்ளது.

முதலமைச்சர் பிரபுல்ல குமார் மகும்தா அஸாம் தலைநகர் கோஹார்த்தியில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை மூலம் இதை தெரிவித்துள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

அடையாள அட்டைகள் மூன்று பிரிவுகளாக பிரித்து வழங்கப்படும். முதலாவது 1951 ஆம் ஆண்டுக்கு முந்திய தேசிய பதிவேட்டில் பெயர் உள்ளவர்களுக்கு வழங்கப்படும்.

1966 ஆம் ஆண்டுக்கும் 1971 ஆம் ஆண்டுக்கும் இடையிலுள்ள தேர்தல் பதிவேட்டில் பெயர் உள்ளவர்களுக்கு இரண்டாவது பிரிவில் வழங்கப்படும். 1981ஆம்ஆண்டுக்கும் 1985 ஆம்ஆண்டுக்கும் இடையில் தேர்தல் பதிவேட்டில் பெயர் உள்ளவர்களுக்கு மூன்றாவது பிரிவிலும் வழங்கப்படும் என்றார்.

இந்த புதியதிட்டம் அஸாம் உடன்பாட்டின் அடிப்படையில் நாடுகடத்தப்பட இருப்பவர்களின் பெயர் மற்றும் பதிவுக்குழப்பங்கள் தொடர்பான அச்சத்தை இல்லாமற் செய்யும் என மகும்தா மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஈரான் நலன் பிரிவை மூட எகிப்து உத்தரவு

(கெய்ரோ)

கெய்ரோவிலுள்ள சுவிஸ் தூதரகத்தில் இயங்கும் ஈரானின் நலன் காக்கும் பிரிவை உடன் மூடிவிடுமாறு எகிப்து உத்தரவிட்டுள்ளது.

''ஈரான் நலன்'' பிரிவுத் தலைவரையும் ஏழுநாட்களுக்குள் நாட்டை விட்டுச் சென்றுவிடுமாறு மேலும் கேட்கப்பட்டுள்ளது.

இதற்குரிய காரணங்கள் எதையும் எகிப்திய அரசு உடனடியாகத் தெரிவிக்கவில்லை.

''காம்ப் டேவிட்'' உடன்படிக்கையில் இஸ்ரேலுடன் சேர்ந்து எகிப்து கைச்சாததிட்டதையடுத்து 1979ஆம் ஆண்டுக்குப் பின் எகிப்து- ஈரான் இராஜதந்திர உறவுகள் முறிவடைந்திருந்தமைதெரிந்ததே.

## இன்றைய பலன்

**மேடம்:** வீண்விரயம், இனசனப்பகை, பிரயாணக்கஷ்டம், வாகனநஷ்டம், உடல்நலக் குறைவு. சகோதரர் உதவி.

**இடபம்:** காதலர் வாழ்வில் வெற்றி. கல்வியால் சிறப்ப, பூமிப்பேறு உத்தியோக உயர்வு, தனலாபம்.

**மிதுனம்:** பணமுடை பிரயாணத்தடை, வீண்பகை, கொடுக்கல் வாங்கல் கஷ்டம் செய்தொழில் மந்தம்.

**கடகம்:** பிதாவழி யோகம், வீரியவிருத்தி, கொடுக்கல்வாங்கல் சிறப்பு, வாக்கு வசீகரம், பணப்புழக்கம், காரியசித்தி.

**சிங்கம்:** வீண்பகை, பூமியால் பிணக்கு, சகோதரர் ஒருவரால் கவலை, ஆயுத பயம், யோசனை மிகுதி.

**கன்னி:** நற்காரிய விருத்தி, புதுத் தொழிலில் முன்னேற்றம், விருந்தினர் வருகை, பெரியோர் நட்பு.

**துலாம்:** காரியக்கேடு, இனசனப்பகை, வீண் விரோதம், தீராப்பழி, இடப்பெயர்வு, கொடுக்கல்வாங்கல் பிணக்கு.

**விருச்சிகம்:** இட மாற்றம், இரக்கசிந்தை, பெரியோர் உதவி, தனதானிய விருத்தி, பூமியால் லாபம், விருந்துபசாரம்.

**தனுசு:** சத்துருபீடை, சரீர சுகக்குறைவு, திருடர் பயம், பணமுடை, புத்திரரால் நன்மை, சகோதரரால் கவலை.

**மகரம்:** தொழிற்பேறு, வாகனவிருத்தி. வணிகர்கள் கவலை, வெளியூர்செய்தியால் நன்மை, கல்வியால் மேன்மை,

**கும்பம்:** தொழில் விருத்தி, புத்திரரால் நன்மை, தனதானியப்பெருக்கம், விவாகசோபனம், கொடுக்கல் வாங்கல் சிறப்பு.

**மீனம்:** பிதாவழி உதவி, பெண்களால் நன்மை, பெரியோர் நல்லாசி, வாகனுதிகளால் வருமான அதிகரிப்பு, புண்ணியச்செலவு.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## அதிர்ச்சி மரணம்

[நாயன்மார்கட்டு]

நேற்று முன்தினம் இரவு நாவற்குழி ராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களின் அதிர்ச்சியால் நாயன்மார்கட்டுப் பகுதியைச்சேர்ந்த ஆறுமுகம் அப்புத்துரை என்ற [60 வயது] வயோதிபர் மரணமானார்.

## மலைப்பாம்புகள் பிடிக்கப்பட்டன

[கிளிநொச்சி]

பார்ப்போரை நடுங்கச்செய்யும் ஐந்து மலைப்பாம்புகளை ஒரே நாளில் உருத்திரபுரம் விவசாயிகள் பிடித்துள்ளனர். மிகுந்த மொத்தமும் நீளமுமுடைய இப்பாம்புகள் மரமொன்றில் கட்டித்தூக்கப்பட்டிருந்ததை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## ஒரு தாயின் மர்மக்கொலை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் ஐந்து பிள்ளைகளின் தாயான முப்பத்து மூன்று வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து அப்பெண்ணின் கணவன் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இன்று பெறலாம்

(உடுவில)

காங்கேசன்துறைக் கிராம சேவையாளர் பிரிவில், இடம் பெயர்ந்தோருக்கான இலவச உணவுப் பொருள் விநியோக உத்தரவுப்பத்திரத்திற்கு விண்ணப்பித்து இதுவரை பெறாதவர்கள் தங்களுடைய உணவு நிவாரண உத்தரவுப் படிவங்களை இன்று 15ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான இளைப்பாற்று மண்டபத்தில் காங்கேசன்துறைக் கிராம சேவகர் திரு. மு. கனகநாயகத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

மிருசுவில் புனித நீக்கிலஸ் இளைஞர் கழக ஆதரவில் நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் மிருசுவில் கொட்டடிகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும்.

இப்போட்டியில் எழுதுமட்டுவாழ் ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம், மிருசுவில் சென் நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம், பளை நியூ சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஆனையிறவு உப்பளம் விளையாட்டுக்கழகம், நாகர்கோவில் சன்றைஸ் விளையாட்டுக்கழகம், கொடிகாமம் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

இறுதிநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கு கேடயமும், வெற்றிக்கிண்ணமும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## ஒரு பக்தனின் ஏக்கம் -6
## ஒருமுறை வருகிறாயா?

என் இறைவா!

நான் சைவ சமயி. சாப்பாட்டிலும் சைவமே. என் தந்தை வழி வந்த பழக்கமிது இளம் வயதில் இந்த நெறி முறையில் என்னை பயிற்றுவிக்கப் படாதபாடு பட்டிருககிறேன். இடையிடையே தடுமாறி வாய்க்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கியதும் உண்டு. ஏககத்தோடுசரி இப்போது வாய்ப்பிருக்கிறது. ஆனால் மனம் பழுத்து விட்டது. பழுத்த மனத்து அடிமை என்பது இது தானா? இறைவா! எப்படி வளர்த்தெடுத்தாய்? உன்னவன் என்று ஏற்றுக்கொண்டதால் தானே என்னை இப்படி ஆக்கினாய். உன் சேனையில் என்னையும் ஒருவனாய்ச் சேர்த்துக் கொண்டாய். நான் கேணலா? கொமாண்டரா? லெப்டினன்டா? எங்கெங்கே என்னை சென்றிக்கு நிறுத்த வேண்டுமோ அங்கங்கே நிறுத்து. சில இடங்களில் நீ நிறுத்தி நான் நிற்கிறேன் தான். அடியும் விழுகிறதே. நீதான் போடுகிறாயே? யார் கண்டார். இடையூறு எனக்குண்டோ? நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகம். நீ என் முன்னால் வந்தால்தான் நான் உண்மையைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். என் குடி முழுதாளும் பரமேஸ்வரா ஒருமுறை வருகிறாயா?

★ ஈழத்துச் சிவானந்தன்

## பாகிஸ்தானை மீண்டும்
## பொதுநலவாய அமைப்பில் சேர்க்க இலங்கை. தீவிரம்

பொதுநல நாடுகளின் அமைப்பில் மீண்டும் சேர்வதற்கு பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது. இலங்கை அதனை ஆதரிக்க முன்வந்துள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற போரைத்தொடர்ந்தே பாகிஸ்தான் இவ் அமைப்பிலிருந்து விலகியது.

கனடாவில் விரைவில் நடைபெறவுள்ள இவ் அமைப்பின் மாநாட்டிலேயே பாகிஸ்தானை இதில் சேர்த்துக்கொள்ளும் தீர்மானத்தை இலங்கை ஆதரிக்கவுள்ளது. இந்தியா இத் தீர்மானத்தை எதிர்த்தாலும் கூட இலங்கை இதனை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மந்திரி காமினியின் பேச்சை லோகசபை கண்டித்தது

(புதுடில்லி)

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உதவியாக நான்கு கோடி ரூபா வழங்கும் தமிழக அரசின் முடிவை பகிரங்கமாகக் குறை கூறியிருப்பதன் மூலம் இலங்கை அமைச்சர் காமினி திஸநாயக்கா ராஜ்பத்துறை உறவுகளை மீறிவிட்டார் என இந்திய நாடாளுமன்ற இரு சபைகளிலும் கண்டிக்கப்பட்டது.

அமைச்சர் காமினி திஸாநாயக்கா இவ்வாறு கூறியிருப்பது சரியானதல்ல என இந்திய அரசு கண்டிக்க வேண்டுமெனவும் மேல்சபையில் உரையாற்றிய அண்ணா தி. மு. க உறுப்பினர் திரு. வலம்புரி ஜோன் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண நகரத்தை முற்றாக சிதைக்கத் திட்டம்

''யாழ். பொது வைத்தியசாலையைமூடிவிடுவதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், இந்த அரசாங்கம் மிகப் பெரிய அளவிலான இராணுவத்தாக்குதலை நடாத்துவதற்குத்திட்டமிடுகிறது என்பதையே தெளிவாக காட்டுகிறது. இதன் காரணமாக யாழ். கோட்டையைச் சுற்றிவரவுள்ள சகல கட்டிடங்களும் பெரும்பாலும் தரைமட்டமாக்கப்படலாம். இதனால் வட பகுதி மக்களின் பொருளாதாரமும்நாளாந்தவாழ்க்கை நிலைமைகளும் மென்மேலும் மோசமடையும்'' என்று நவசமசமாஜக்கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி நடவடிக்கைகள் மூலம் ஆகக்குறைந்தது யாழ். நகரம் சிதைக்கப்படுவதுடன், யாழ்ப்பாண நாகரிகத்திற்கும் ஈடு செய்யமுடியாத களங்கம் ஏற்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

15-05-1987 வெள்ளிக்கிழமை

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

★ அரசாங்க புலனாய்வுத்துறையின் தகவல்:

# 2500 மலையக இளைஞர்கள் தீவிரவாத பயிற்சி பெற்றுள்ளனர்!

சுமார் 2, 500 மலையக இளைஞர்கள் வடக்கிலும், தென் இந்தியாவிலும் உள்ள தீவிரவாதிகளின் முகாம்களில் ஆயுதப்பயிற்சி பெற்றுள்ளதாக அரசாங்கத்தின் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் மலையகப் பகுதிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தலைமைப்பீடத்தின் உத்தரவை எதிர்பார்த்திருப்பதாகவும் முழுமையான பயிற்சிகளை இவர்கள் பெற்றிருப்பதாகவும் அத்தகவல் மேலும் தெரிவிக்கிறது.

பெருந்தொகையான இளைஞர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு கொண்டுவரப்பட்டு இங்குள்ள காடுகளில் ஆயுதங்களைக் கையாளுதல், நேரடிச் சமரில் ஈடுபடுதல் என்பனவற்றில் பயிற்சியளிக்கப்படுகின்றார்கள். அத்துடன் இளைஞர் குழுக்கள் தென்னிந்தியாவுக்கும் கொண்டு செல்லப்பட்டு தலைமைத்துவம், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்றவற்றிலும் தீவிர பயிற்சிக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

மலையகப் பகுதியிலுள்ள பாதுகாப்பு கேந்திர நிலையங்களிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் தாக்குதல் நடாத்துவதே இவர்களது நோக்கம். இதன் மூலம் மலையகப்பகுதிகளில் பதற்ற நிலையை ஏற்படுத்தி தமிழ்த் தீவிரவாதிகளுக்குச் சாதகமாக அவற்றைப் பயன்படுத்துவது இவர்களது முக்கிய குறிக்கோள் எனவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ராணுவ உயர் அதிகாரிகட்கு உள்ளூர் ஆடுகளே விருந்து

ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த சில நாட்களாக ஆயுதப்படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. இதனால் இப்பகுதியில் வதியும் மக்களும் இப்பகுதியின் ஊடாக போக்குவரத்துச் செய்வோரும் பல சிரமங்களுக்கும், தொந்தரவுகளுக்கும் உள்ளாகிவருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் இப் பகுதியால் வந்த வாகனங்களையும் அதில்வந்த பிரயாணிகளையும் இராணுவத்தினர் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன பணியகத்தில் பணயமாக வைத்திருக்க, மற்றொரு பிரிவு இராணுவத்தினர் கற்சிலைமடு பகுதிககு சென்று அட்டகாசங்களில் இறங்கினராம்.

அங்குள்ள வீடொன்றில் ஆட்டுப்பட்டியில் இருந்த பன்னிரண்டு ஆடுகளையும் அச்சமயம் இராணுவத்தினர் கட்டு தம்முடன் எடுத்துச் சென்றனர். இந்த ஆடுகள் முல்லைத்தீவு விமானநிலைய திறப்புவிழா வைபவத்திற்கு கொழும்பிலிருந்து வந்த உயர் அதிகாரிகளுக்கு விருந்து வைக்கப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குருநகர், பாஷையூர் பகுதி குடும்பங்கள் அகதிகளாக பூநகரியில் குடியேற்றம்!

(பூநகரி)

குருநகர், பாஷையூர் போன்ற இடங்களைச் சேர்ந்த 1,500 க்கும் மேற்பட்டவர்கள் மறுகரையான பூநகரிக்கு அகதிகளாக வந்து சேர்ந்துள்ளார்கள். சுமார் இருபதுக்குமேற்பட்ட வள்ளங்களில் வந்து சேர்ந்துள்ள இவர்கள் கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களால் அதிகளவிலான உயிர் – உடைமைச் சேதங்கள் ஏற்படுவதாலேயே தாம் இவ்வாறு அகதிகளாகவந்ததாகத் தெரிவிக்கின்றார்கள்.

பூநகரியிலுள்ள கல்முனை, விநாசியோடைப் பகுதிகளில் தஞ்சம்புகுந்துள்ள இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட இருபத்தொரு வயோதிபர்களும் உள்ளார்கள்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் வந்துசேர்ந்த இவர்களை இப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வரவேற்று ஆதரித்ததோடு, மூன்று மூடை அரிசி உட்பட வேறு உணவுப்பொருட்களையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் நிவாரண உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## திருமலையில் மின்கோபுரம் குண்டு வைத்துத் தகர்ப்பு

திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை என்ற இடத்தில் உள்ள மின்சார கோபுரத்தின் ஒரு பகுதி குண்டுவைத்து தகர்க்கப்பட்டதாக அறிவிககப்படுகிறது.

அங்கு வைக்கப்பட்ட மற்றைய குண்டுகள் வெடிக்கவில்லை எனவும், அதனை ராணுவத்தினர் எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பினால் மின் விநியோகம் தடைப்படவில்லை.

## 5 ராணுவம் பலி

கடந்த செவ்வாய்க்கிழமை திருமலை மாவட்டத்திலுள்ள கல்லறுப்பு என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர். கதிரவெளிக்கும், வெருகலுக்கும் இடையே கல்லறுப்பு உள்ளது. பிற்பகல் இரண்டு மணியளவில் இக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது.

### ஆனையிறவு.

தேவையான பொருட்களை உள்ளடக்கிய லொறிகள் என்பனவும் ஆனையிறவை வந்தடைந்துள்ளன. பல ட்ரக்குகளில் புதிதாக முகாம்கள் அமைப்பதற்குத் தேவையான முட்கம்பிகள், கன்வஸ் கூரைச்சீலைகள், மரங்கள், இராணுவ தளபாடங்கள் என்பனவும கொண்டுவரப்பட்டுள்ளன.

இப்பொருட்களை ஏற்றிய வாகனங்கள் பொருட்கள் இறக்கப்படாத நிலையிலேயே சிலதினங்களாக ஆனையிறவு முகாமில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதினால் இராணுவத்தினர் வடக்கு நோக்கிய பயணத்தை மேலும் தொடர முயலலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

### திருமண..

மார் கோவிலடிக்கு கார் பவனியாக வந்தபோதே இத் தாக்குதல் நடத்த பட்டது.

இதனால் காயமடைந்த ஈழநாடு மனேஜரான எஸ் கே. அம்பலவாணர், திரௌபதி பாரதி (30) என்ற பெண் ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத் தப்பட்டனர்.

முரசொலி கேடயத்துக்காக

ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்

நடத்தும்

இிரிக்கெட் போட்டி

மழைகாரணமாக நேற்று

இடைநிறுத்தப்பட்டது.

நாளை 16ஆம் திகதி சனிக்கிழமை

நண்பகல் 12 மணிக்கு

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்

போட்டி ஆரம்பமாகும்.

பிரவேசக் கட்டணம் : 2 ரூபா

## எம். பியின் நண்பர் கடத்தல்

தங்காலை எம். பி ஜினதாஸ வீரசிங்காவின் நெருங்கிய அரசியல் சகாவான டீ. எச். மகாநாம என்பவர் ஜே வி. பி. இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிலரது நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததாலேயே இவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

### பூநகரி

இதேவேளையில் இங்கு இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பஸ் ஒன்றிலிருந்து இறக்கப்பட்டு சுடப்பட்ட இருவரது சடலங்கள் அடையாளங் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் ஒருவர் மன்னார் போக்குவரத்துச் சபையின் காப்பாளர் என். நாகராசா என்பவர். இவர் கைதடியைச் சேர்ந்தவர். மற்றவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்த நஸீர் என்ற முஸ்லிம் இளைஞர்.

### ஹெலி...

கள் யாழ்ப்பாணத்திலுள் பிரவேசிக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் இவ்விடங்களை விட்டு நீங்கள் நீங்கவேண்டியதுடன், பயங்கரவாதிகள் இவ்விடங்களை விட்டு நீக்கப்பட்டபின்பு உங்களுக்குத் திரும்பிவர முடியும்'' என்று தெரிவிக்கப்பட்ட பிரசுரம் நேற்று ஹெலி மூலம் வீசப்பட்டது.

## களவுபோன சைக்கிள்கள் புலிகளிடம் பிடிபட்டன

சைக்கிள் திருடர்களிடமிருந்து பதின்நான்கு சைக்கிள்கள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன இவற்றின் உரிமையாளர்கள் புலிகளின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சைக்கிள்களின் விபரம் வருமாறு:-

ஏசியா - 006 ஏ B 4290; ஏசியா – 002 ஏ B 0243; ஏசியா – பி எஸ் 3321; ஹீரோ–டி 159430; ஹீரோ- ஏ922359; லுமாலா - ஏ 20047; லுமாலா- ஏ 16964; றலி - 70 சி 571 ;போனிக்ஸ் - ஜி எச் 116386; ஹீரோ - எச்ஜே 89611; இனம்தெரியாத ஈ எல் 147; எச் எல் 9738; டி டி 19735; ஏ டபிள்யூ 58377.

## ஐசரிவேலன் காலமானார்

திரைப்பட, நாடக நகைச்சுவை நடிகரும், அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் சட்டசபை உறுப்பினருமான திரு. ஐசரிவேலன் நேற்று சென்னையில் மாரடைப்பினால் மரணமானார். இவருக்கு இறக்கும்போது வயது 46 ஆகும்.

### கூட்டணி .

விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய இயக்கங்களுடன் மட்டுமே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவந்த இந்திய அரசாங்கம்நீண்ட இடைவெளியின் பின்னர் கூட்டணியினருடன் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஆஸ்பத்திரி---

களில் முக்கியமானதாகும். இந்த நிபந்தனையே அரசினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அபிப்பிராயத்தையும், நிலையையும் அறிந்துகொண்டு டாக்டர்கள் குழுவொன்று நேற்று விமானம் மூலம் கொழும்பு பயணமானது. இக்குழுவில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி.எஸ். நச்சினார்க்கினியன், டாக்டர் எஸ். சிவகுமாரன் ஆகியோர் சென்றுள்ளனர். இவர்கள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடனும், போதனாவைத்தியசாலை அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்துவர்.

## மீட்டல் பயிற்சி

முதலுதவி மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறவுள்ளன. முதலுதவிப் பயிற்சியில் தகுதி பெற்றவர்கள் இதில் பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

## நாளை

வட்டு. கல்வி சமூக அபிவிருத்திக் கழக வைகாசிக் கலை நிகழ்ச்சி வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தில் சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் திரு. கா. தங்கராசா தலைமையில் நடைபெறும். இந் நிகழ்ச்சியில் பல கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### ஊர்காவற்றுறையில் ..

ஹெலி தாக்குதலில் சேதமடைந்தன.

ஹெலிகப்டர்களின் இத் திடீர் நடமாட்டங்களால் ஊர்காவற்றுறை நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இதேவேளையில் இரவு நேரத்தில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் 'ஷெல்' தாக்குதல்களும், பீரங்கித் தாக்குதல்களும் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அடிக்கடிமேற்கொள்ளப்படுகின்றன

### தமிழர்..

மேலும் சொன்னார். தமிழர்கள் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழும் வகையிலேயே தீர்வு அமைய வேண்டுமெ ன வும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 15 . 05 . 87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.